**சுருக்கம்**

சுற்றுலா – மாநில அரசு திட்டம் 2011–2012 – மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – விருதுநகர் மாவட்டம் இருக்கன்குடி அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில், திருத்தங்கல் அருள்மிகு நின்ற நாராயண பெருமாள் திருக்கோவில் பகுதிகளில் சுற்றுலா அடிப்படை வசதிகள்– ரூ.40.00 இலட்சம் – நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுலா மற்றும் பண்பாட்டு (சு3)த் துறை**

அரசாணை (நிலை) எண்.222 நாள்:26.11.2011
(திருவள்ளுவர் ஆண்டு 2042, கார்த்திகை–10)

**படிக்கப்பட்டது:-**

சுற்றுலா இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண் 6773/திமவ2/2011, நாள் 7.10.2011.

-----

**ஆணை:**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சுற்றுலாத்துறை மானியக் கோரிக்கை (2011–2012) விவாதத்தின்போது, 30.8.2011 அன்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

***“விருதுநகர் மாவட்டம் இருக்கன்குடியில் உள்ள அருள்மிகு மாரியம்மன் கோவிலுக்கு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகின்றனர். அதேபோன்று ரமண மகரிஷி பிறந்த இடமான திருச்சுழி மற்றும் வைணவத் தலமான திருத்தங்கல் ஆகிய இடங்களுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இங்கு தங்கும் வசதி, கழிப்பறைகள், தெருவிளக்குகள், சாலை வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும்”.***

2. மேலே படிக்கப்பட்டுள்ள சுற்றுலா இயக்குநரின் கடிதத்தில், மேற்கண்ட அறிவிப்பின்படி, விருதுநகர் மாவட்டம் இருக்கன்குடி, திருத்தங்கல் பகுதிகளில் சுற்றுலா அடிப்படை வசதிகள் மேம்பாட்டுப் பணிகளுக்காக சுற்றுலா இயக்குநர் உரிய கருத்து அனுப்பியுள்ளார். சுற்றுலா இயக்குநர் தனது கருத்துருவில், விருதுநகர் மாவட்டம் இருக்கன்குடி, திருத்தங்கல் ஆகிய இடங்களில் ரூ.40.00 இலட்சம் மதிப்பில் பின்வரும் அடிப்படை வசதிகள் மேற்கொள்வதற்காக கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடு, விருதுநகர் மாவட்ட ஆட்சியரால் அனுப்பி வைக்கப்பட்டு, நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்:–

| வ. எண் | திட்டப்பணி | தொகை (ரூபாய் இலட்சத்தில்) | மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| *அ)* | *அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில், இருக்கன்குடி* | | |
| 1 | பக்தர்கள் ஓய்வு மண்டபம் | 15.00 | |
| 2 | கழிவறை வசதி | 4.00 | |

| | | | |
|---|---|---|---|
| 3 | குடிநீர் வசதி | 1.00 | 20.00 |
| *ஆ)* | *அருள்மிகு நின்ற நாராயணப் பெருமாள் திருக்கோவில், திருத்தங்கல்* | | |
| 1 | பக்தர்கள் ஓய்வு மண்டபம் | 15.60 | |
| 2 | கழிவறை வசதி | 3.60 | |
| 3 | குடிநீர் வசதி | 0.80 | 20.00 |
| | மொத்தம்(அ+ஆ) | | 40.00 |
| | (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்) | | |

மேற்கண்ட பணிகளுக்காக ரூ.40.00 இலட்சத்திற்கான மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர் அவர்களின் கருத்துருவிற்கு சுற்றுலா இயக்குநர் பரிந்துரை அளித்துள்ளார். மேலும், ஒப்பளிக்கப்பட்ட தொகையை சுற்றுலா இயக்குநர், சென்னை அவர்கள் பெற்று பணிகளை மேற்கொள்ள ஏதுவாக, விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வழங்குவதற்கு அனுமதி அளிக்குமாறும் சுற்றுலா இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், மேலே பத்தி 2ல் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுலா இயக்குநரின் கருத்துருவினை ஏற்று பின்வருமாறு ஆணையிடுகிறது:

(அ) மேலே பத்தி 2ல் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுலா இயக்குநரின் கருத்துருவை ஏற்று, விருதுநகர் மாவட்டம் இருக்கன்குடி அருள்மிகு மாரியம்மன் கோவில் பகுதியில் அடிப்படை வசதிகளை மேற்கொள்வதற்கு ரூ.20.00 இலட்சமும் (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்), திருத்தங்கல் அருள்மிகு நின்ற நாராயண பெருமாள் திருக்கோவில் பகுதியில் அடிப்படை வசதிகளை மேற்கொள்ள ரூ.20.00 இலட்சமும் (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்), ஆக மொத்தம் ரூ.40.00 இலட்சத்திற்கு (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்) நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

(ஆ) மேலே பத்தி 3(அ)–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று, பணிகளை மேற்கொள்ள ஏதுவாக மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர் அவர்களுக்கு வழங்குவதற்கு சுற்றுலாத் துறை இயக்குநருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:

5452–சுற்றுலா குறித்த மூலதனச் செலவு – 01 – சுற்றுலா அடிப்படை வசதிகள் – 101 – சுற்றுலா தலங்கள் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம் – KV – சுற்றுலா மையங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் – 16 – பெரும்பணிகள்.
(து.தொ.கு. 5452 01 101 KV 1604)

**5.** இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.**267**/DS(KM)/**2011**, நாள்:**21.11.2011**ல் பெறப்பட்ட ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வி.கு. ஜெயக்கொடி**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
சுற்றுலா இயக்குநர், சென்னை –2.
மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை –9.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை –9.
(சுற்றுலா இயக்குநர் வழியாக).
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –9/18.

**நகல்:**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை –9.
மாண்புமிகு நிதித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை –9.
மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்,
சென்னை –9.
தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை –9.
முதன்மை செயலாளரின் தனிச் செயலாளர், நிதி/சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை –9.
நிதி(கல்வி–2)த் துறை, சென்னை– 9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டு (சு1/சு2/பொது)த் துறை, சென்னை –9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**